[1982 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, 974 தொழிற்கூடங்களில் தற்போது 793 தொழிற்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. நான்கு வகைகளில் அவை செயல் பட்டு வருகின்றன. வாடகைத் தொழிற்கூடங்களில் இயங்கும் தொழில்கள் 245. சீர்திருத்தப்பட்ட முறைகளில் அமைந்துள்ள தொழில்கள் 239. சிட்கோ உதவித் திட்டத்தின்கீழ் அமைந் துள்ள தொழில்கள் 209. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக்டார்) 100 ஆக 793 தொழிற்கூடங்கள் தற்போது இயங்கு கின்றன. அடுத்து, 181 தொழிற்கூடங்கள் விரைவில் உருவாக இருக்கின்றன. சிட்கோ உதவித் திட்டத்தின் கீழ் அமைகின்ற தொழிற்கூடங்கள் 81. சின்னஞ்சிறு தொழில்கள் (டைனி செக் டார்) 100. ஆக இரண்டு இனங்களில் 181 தொழிற்கூடங்கள் வருகிற ஏப்ரல் மாதம் இறுதிக்குள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற்கூடங்கள் இயங்குவது பற்றிச் சொன்னார்கள். தொழிற் கூடங்களைத் தொடங்குவதற்கு அம்பத்தூரில் மட்டுமல்லாமல் சென்னையை சுற்றியுள்ள தொழில் நகர்களில் இருக்கிற அரசுக்குச் சொந்தமான காலி நிலங்களை இப்படி தொழிற்கூடங்கள் அமைக்க குத்தகை முறை யில் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பொள்ளாச்சியிலுள்ள "Top Slip" பகுதியை அழகுபடுத்துப் திட்டம்.

*வினா எண். 143—திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

பொள்ளாச்சிப் பகுதியில் உள்ள "T p Sl p" பகுதியை வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகை யில் அழகு படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை மாவட்ட உலாத் தலமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீல னையில் உள்ளது.

1982 பிப்ரவரி 11]

திரு. எம். வி. இரத்தினம் : தலைவரவர்களே, இயற்கை எழில் மிக்க அந்தப் பகுதியில் சிறந்த வனவிலங்கு சரணாலயம் இருக்கிற காரணத்தாலும் அந்தப் பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தாலும் தமிழக சுற்றுலா வாரியம் பரிந்துரை செய்திருக்கிற காரணத்தாலும் விரைவில் அழகுபடுத்தி, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதற்குத்தான் முதலிலே விடை அளித்திருக்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட உலாத்தலங்கள் என்ற அளவில் சில பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு, பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதிலே டாப்சிலிப், ஆனமலை, திருமூர்த்தி ஆகிய மூன்று இடங்களும் பரிசீலனைக்கு உட்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதிகள் நிதிநிலைக்கு ஏற்றவாறு வரிசையாக முறைப்படுத்தி, சீர்திருத்தப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு, மாவட்ட உலாத் தலங்களாக மாற்றப்படும் என்பதையும் அவை மக்களுக்கு கவர்ச்சிகரமாக அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் டாப்சிலிப் என்ற இடம் தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இடையில் எல்லையாக இருக்கிற மலைப்பகுதியில் இருக்கிற அருமையான இடம். அந்த இடத்தை சுற்றுலா ஸ்தலமாக அபிவிருத்தி செய்தால் அரசுக்கு நல்ல வருவாய் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்தில் பொள்ளாச்சி தாலுக்காவில் வால்பாறை மலையும் சோலையாறு மலைப்பகுதி முழுவதும், அங்கிருந்து செல்லக்கூடிய பாதையில் இருக்கக்கூடிய அட்டகட்டி வாட்டர் ஃபால்சும் அருமையான இடங்கள் ; அந்தப் பகுதிகளையும் சுற்றுலா ஸ்தலங்களாக அபிவிருத்தி செய்ய அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்ட ஆனைமலைப் பகுதி என்பது வால்பாறையைத்தான் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறேன். டாப்ஸ்லிப், வால்பாறை, திருமூர்த்தி மலைப்பகுதிகள் தான் இப்போது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன.

திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே கிரேஸ் ஹில்ஸ் பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா !

[1982 பிப்ரவரி 11

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, வால்பாறை என்று தெரிவிக்கின்றபோது அந்தப் பகுதியிலே என்னென்ன சிறப்பான பகுதிகள் எல்லாம் மக்களைக் கவருகின்ற வகையிலே இருக்கின்றனவோ அவைகள் எல்லாவற்றையும் இணைத்துத்தான் அந்தப் பகுதிகள் மேம்பாடு செய்யப்படும்.

திரு. மா. சின்னராசு : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்த அந்த லிஸ்டிலே பல இடங்கள் பற்றி அறிவித்தார்கள். கோவை மாவட்டத்திற்கு மிக அருகாமையில் இருக்கின்ற சிறுவாணியின் அடிப்பகுதியிலே முண்டந்துறை என்று அழைக்கப்படுகின்ற பகுதி கோவை குற்றாலம் என்று கூட அழைக்கப்படுகின்ற நிலைமையில் இருக்கின்றது. அங்கே மிக அருமையான அருவி இருக்கின்றது. ஆகவே அதையும் சேர்த்துப் பரிசீலனை செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து மாவட்ட உலாத்தலக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 3, 4 இடங்களை சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு நிதிநிலை சரியில்லை என்று சொன்னார்கள். ஆகவே மத்திய அரசினிடத்திலே இருந்து இதற்கு ஏதாவது உதவி கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதுபோன்று சுற்றுலாத்தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை. மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாடு திட்டம் என்ற பெயராலும், மலைப் பகுதி மேம்பாடு திட்டம் என்ற பெயராலும் தான் அவர்கள் நிதியுதவி செய்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழே வருகின்ற பகுதிகளிலே அந்தப் பகுதிகள் அடங்குமானால் அதற்கான அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு அந்த நிதியுதவியினைப் பயன்படுத்த இயலும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்பு நமது அரசு மாயூரம் பகுதியிலே உள்ள தரங்கம்பாடி பகுதியில்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோவை மாவட்டத்தைப் பற்றிய கேள்வி, எனவே மாயூரம் பற்றிக் கேட்டால் பதில் இருக்காது.